# இயல் 4

## கல்விக்கண் திறந்தவர்

# கர்மவீரர் காமராசர்



# பெருந்தலைவர் வரலாறு

காமராசர் விருதுநகரில் 1903 ஆம் ஆண்டு சூலை 15ஆம் தேதி பிறந்தார். இவர்தம் பெற்றோர் குமாரசாமி நாடார் மற்றும் சிவகாமி அம்மாள் ஆவர். முதலில் இவருக்குக் குலத் தெய்வமான காமாட்சியின் பெயரையே முதலில் சூட்டினார்கள். தாயார் சிவகாமி அம்மாள் மட்டும், அவரை "ராசா" என்றே அழைத்து வந்தார். நாளடைவில் காமாட்சி என்ற பெயர் மாறி, 'காமராசு' என்று ஆனது. தனது பள்ளிப் படிப்பைச் சத்ரிய வித்யா சாலா பள்ளியில் தொடங்கினார். படிக்கும் போதே மிகவும் பொறுமையுடனும் விட்டுக் கொடுக்கும் மனத்துடனும் விளங்கினார். சிவகாமி அம்மாளுக்கு இரண்டு சகோதரர்கள். ஒருவர் கருப்பையா நாடார். இவர் துணிக்கடை வைத்திருந்தார். மற்றொருவர் பெயர் காசிநாராயண நாடார். இவர் திருவனந்தபுரத்திலே மரக்கடை வைத்து நடத்தி வந்தார்.

காமராசர் (காமராஜர்) (*K. Kamaraj*, 15 சூலை 1903 - 2 அக்டோபர் 1975) இவர் 1954 ஆம் ஆண்டு அப்போதைய சென்னை மாநில முதலமைச்சர் ஆவார். இவர் ஒன்பது ஆண்டுகள் சென்னை மாநில முதல்வராகப் பதவி வகித்தார். தமிழகத்தில் பள்ளிக் குழந்தைகளுக்கு இலவச மதிய உணவுத் திட்டத்தை அறிமுகப்படுத்தினார்.

# சிறப்புப் பெயர்கள் & சிறப்புத் திட்டங்கள்

| | |
|---|---|
| பிறப்பு | :ஜூலை 15, 1903 |
| இடம் | :விருதுநகர், தமிழ்நாடு |
| பெற்றோர் | :குமாரசாமி நாடார்- சிவகாமியம்மாள் |
| பணி | :அரசியல் தலைவர், தமிழக முதல்வர். |
| சிறப்பு பெயர்கள் | :`பெரும் தலைவர்', `தென்னாட்டு காந்தி', `படிக்காத மேதை', `கர்ம வீரர்', `கல்விக்கண் திறந்த காமராஜர்' , `கிங்மேக்கர்' |
| இறப்பு | :அக்டோபர் 2, 1975 |

- பள்ளியில் இலவச உணவு திட்டம்
- இலவச சீருடை மற்றும் புத்தகங்கள் திட்டம்
- நெய்வேலி லிக்னைட் கார்ப்பரேஷன்
- பெரம்பூர் லோகோ ஒர்க்ஸ்
- பாரத் ஹெவி எலக்ட்ரிக்கல் லிமிடெட்
- மேட்டூர் காகித தொழிற்சாலை
- மேட்டூர் அணை திட்டம்
- காவேரி டெல்டா திட்டம் மற்றும் பல..

# தபால் அஞ்சல் தலை



# நன்றி